## சுருக்கம்

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை–கிருஷ்ணகிரி மாவட்டம்–ஒசூர் நகரம்– உள்வட்ட சாலை அமைக்கும் பணி– கி.மீ. 4/850–8/850 வரையுள்ள பகுதிகளை மேம்பாடு செய்தல் மற்றும் அச்சாலையில் கி.மீ.0/0–8/850 வரையுள்ள பகுதிகளில் நில எடுப்பு பணிக்காக இழப்பீட்டு தொகை வழங்குதல்– அனுமதியளித்து ஆணையிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.க்யூ.2) துறை

அரசாணை (நிலை) எண். 132

நாள் 21–11–2011
கார்த்திகை 5, திருவள்ளுவராண்டு 2042

படிக்கவும்:

1) அரசாணை (நிலை) எண்.836, போக்குவரத்து துறை, நாள் 26.05.1986.
2) அரசாணை (நிலை) எண்.606, பொதுப்பணித் துறை, நாள் 16.04.1993.
3) அரசாணை (நிலை) எண்.228, நெடுஞ்சாலைத் துறை, நாள் 22.12.2000.
4) அரசாணை (நிலை) எண்.197, நெடுஞ்சாலைத் துறை, நாள் 16.09.2005.
5) அரசாணை (நிலை) எண்.174, நெடுஞ்சாலைத் துறை, நாள் 9.09.2009.

மீண்டும் படிக்கவும்:

6) தலைமைப் பொறியாளர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு, கடித எண். 38888/ திட்டம் 2/ 2009 நாள் 14.10.2011.

---

**ஆணை:**

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் நகருக்கு உள்வட்டச்சாலை அமைக்கும் பணிக்கு பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.79.20 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டது. அப்பணி தேசிய நெடுஞ்சாலை அலகிற்கு ஒப்படைக்கப்பட்டது. மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் இப்பணிக்கான கட்டுமானப் பொருட்கள், தொழிலாளர் சம்பளம் மற்றும் நில எடுப்பு ஆகிய இனங்களில் கூடுதல் செலவு ஏற்பட்டதால் ரூ.194.32 இலட்சத்திற்கு முதல் திருத்திய நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. அத்துடன் இப்பணியானது கி.மீ.0/0–5/0 மற்றும் கி.மீ. 5/0–8/830 என்று இரு பகுதிகளாக பணிப்பிரிப்பு செய்ய ஆணையிடப்பட்டு முறையே திருவாளர்கள் இராஜம் என்ஜினியரிங் காண்ட்ராக்டர்ஸ் மற்றும் திருவாளர்கள் அன்னபூர்ணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. மேலே பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பந்தப்புள்ளியில் ஏற்பட்ட கூடுதல் நில எடுப்பு மதிப்பீடு அதிகரித்தல் மற்றும் நீதிமன்ற வழக்குகளில் கூடுதல் இழப்பீட்டுத் தொகை கோரப்பட்டதால், ரூ.562.03 இலட்சத்திற்கு இரண்டாவது திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

2. மேலே பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணையின்படி இப்பணியானது தலைமைப் பொறியாளர் (பொது) அலகிற்கு மாற்றப்பட்டது. மேலே பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒசூர் உள்வட்ட சாலையின் முதற்கட்ட பணியான கி.மீ.0/0–5/0 வரையுள்ள பகுதிகளை ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு ரூ.600.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பணிக்கு தொழில் நுட்ப ஒப்புதல் ரூ.600.00 இலட்சத்திற்கு வழங்கப்பட்டதோடு, அதில் கி.மீ. 0/0–4/850 வரையுள்ள பகுதிகளை மேம்பாடு செய்யும் பணியோடு ஏற்கனவே இருந்த சாலைக்கு இணைப்பு ஏற்படுத்தும் வகையில் கி.மீ.1/10–ல் ஒசூர் – தளி சாலையில் இணைப்பு சாலை அமைக்கப்பட்டது.

3. மேலே பார்வை 6–இல் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர் (நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு அவர்களின் கடிதத்தில் ஒசூர் உள்வட்ட சாலையில் மீதமுள்ள சாலை பகுதிகளான கி.மீ.4/850–8/850

வரை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.1000 இலட்சத்துக்கு நிர்வாக ஒப்புதலும், இச்சாலையில் கி.மீ.0/0–8/850 வரையுள்ள பகுதிகளில் நில எடுப்பு செய்யப்பட்டதில் 2004–ஆம் ஆண்டு விலை மதிப்பீட்டின்படி, ரூ.81,27,032/– மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கு 7–3–2007 அன்று தலைமை செயலரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டவாறு அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நில உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையினை கீழ்க்கண்டவாறு ரூ.350/– இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்குமாறு அரசை கோரியுள்ளார்.

| | |
|---|---|
| தமிழ்நாடு மின்வாரியத்தின் 0.09.0 ஹெக்டேர் நிலத்திற்கான இழப்பீடு தொகை | ரூ.3,51,679.00 |
| இரயில்வேயின் 0.13.0 ஹெக்டேர் நிலத்திற்கான இழப்பீடு தொகை | ரூ.50,798.00 |
| சிப்காட்டின் 1.43.0 ஹெக்டேர் நிலத்திற்கான இழப்பீடு தொகை | ரூ.97,45,090.00 |
| 22 நில ஆர்ஜித வழக்குகளின் அடிப்படையில் சார் ஆட்சியர் –ஒசூர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.49,99,856.00 |
| திரு.பாப்பையா அவர்களின் 0.33.0 ஹெக்டேர் நிலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கிருஷ்ணகிரி அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.1,78,82,150.00 |
| விலை மாறுபாட்டால் அதிகரித்த நில எடுப்பு தொகை | ரூ.19,70,427.00 |
| **நிகர மொத்தம்** | **ரூ.3,50,00,000.00** |

4. மேற்கண்ட உள்வட்டச் சாலை பணியில் 20 மீட்டர் நீளம் கூடுதலாக ஏற்பட்டுள்ளதற்கு அறிக்கை கோரப்பட்டதில், இப்பணியானது 0/0–8/830 கி.மீ. (8.83 கி.மீ.) நீளத்திற்கு பூர்வாங்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. எனினும் கள அமைப்பின் அளவுகளின்படி (Site condition) மொத்த நீளம் 0/0–8/850 கி.மீ. என கண்டறியப்பட்டுள்ளது. இச்சிறு மாறுதலான (Minor variation) 20 மீட்டர் அதிகரிப்பு, கள அமைப்பின் படியே ஏற்பட்டுள்ளது. நில எடுப்பு நேர்வுகளில் (Land Acquisition Component) எவ்வித மாறுபாடுகளும் இல்லை என்பதால், இதற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் பெறத் தேவையில்லை எனத் தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு) தெரிவித்துள்ளார். மேலும், பார்வை 6–இல் படிக்கப்பட்ட கடிதத்தில் இந்நில எடுப்பு நேர்வு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.பாப்பையா அவர்கள் நில எடுப்பு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாமைக்காக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (C.P.No.1760/2010) தொடர்ந்துள்ளதாகவும் உயர்நீதிமன்ற நீதிபதி திரு.கே.வெங்கடராமன் அவர்கள் மனுதாரருக்கு உரிய இழப்பீட்டுத் தொகையானது 31.10.2011க்கு முன்பு வழங்கப்பட்டு அதை நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மேலும், இந்நேர்வில் நிர்வாக ஒப்புதல் பெற்ற பின்பே மேற்கண்ட இழப்பீட்டுத் தொகை வழங்க இயலும் என்பதால் மேற்கண்ட நிர்வாக ஒப்புதலை வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (நெ) (கட்டுமானம் (ம) பராமரிப்பு) அரசை கோரியுள்ளார்.

6. தலைமைப் பொறியாளர் (நெ) (கட்டுமானம் (ம) பராமரிப்பு) அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் நகர உள்வட்ட சாலையில் கி.மீ.4/850–8/850 வரையுள்ள பகுதிகளை மேம்பாடு செய்தல் பணிக்கு விலையேற்ற மாறுபாடு 10% என்பதற்கு பதிலாக 5% எனக் கணக்கிட்டு ரூ.9,49,06,707–க்கு (ரூபாய் ஒன்பது கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்து ஆறாயிரத்து எழுநூற்று ஏழு மட்டும்) நிர்வாக ஒப்புதலும், இச்சாலையில் கி.மீ.0/0–8/850 வரையுள்ள பகுதிகளில் நில எடுப்பு செய்தமைக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூ.3.50 கோடிக்கு (ரூபாய் மூன்று கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) ஒப்புதலும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி –6ல் ஒப்பளிக்கப்பட்ட

அ) சாலை மேம்பாட்டு பணிகளுக்கான செலவினம் ரூ.9,49,06,707/–ஐ கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

5054– சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 04– மாவட்டச் சாலைகளும் ஏனைய சாலைகளும்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II – மாநிலத்திட்டம் – 800 – ஏனைய செலவு – JD - ஏனைய சாலைகள் – 16 பெரும் பணிகள் (த.தொ.கு.5054–04–800–JD–1608)

ஆ) நிலமெடுப்பு செய்ததற்கான இழப்பீட்டுத் தொகை குறித்த செலவினமான ரூ.3.50 கோடியினை கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

5054– சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 04– மாவட்டச் சாலைகளும் ஏனைய சாலைகளும்– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II – மாநிலத்திட்டம் – 800 – ஏனைய செலவு – JD - ஏனைய சாலைகள் – 64 நிலங்கள் (த.தொ.கு.5054–04–800–JD–6407)

8. மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுப் பணிகள் (New Service)" குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இருபடிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலும் இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (பொதுப்பணி–1) துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை, சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணையானது நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு.எண். 88/JS/ Dr PU/2011 நாள் 21.11.2011 –ன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.931 (தொள்ளாயிரத்து முப்பத்து ஒன்று) படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கிராமச்சந்திரன்,
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>

தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (ம) பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5
தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5

மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35
முதன்மைச் செயலர் (ம) நில நிர்வாக ஆணையர், சென்னை–5

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு நிதியமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் அமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு தலைமைச் செயலாளர் அலுவலகம், சென்னை–9
நிதி (பொ.ப.I)/(வ.செ.பா.2/வ.செ.பொ–1 /வ.செ.பொது.2) துறை, சென்னை–9
இ.கோ/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.